CASE NO : ESIOP 14/2025

NAME : PW1 – சிவக்குமார்

DATE : 21.11.2025

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்ட பின்பு முதல் விசாரணை தொடர்ச்சி

என்னிடம் காட்டப்படுவது தான் 15.10.2025 தேதியிட்ட இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு கொடுத்த அதிகார கடிதம் என்றால் சரிதான். அது Ex P8.

குறுக்கு விசாரணை

Ex P8 கடிதத்தில் minutesல் இந்த கடிதத்தை குறிப்பிட்டு குறிப்பிட்டுள்ளதாக உள்ளதா என்றால் இல்லை. ஜனவரி 2022 முதல் 10 வருடத்திற்கு முன்னால் வரையிலான காலத்திற்கு எனக்கு அதிகாரம் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். ஆனால் நான் 15 வருடங்களுக்கு முன்பு இருந்தே Director ஆக இருந்து வருகிறேன். Ex P8 கடிதம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

ESIOP 14/2025 வழக்கு எந்த வழக்கின் தொடர்ச்சி என்பது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ESIOP 106/2019 வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் Regulation 10 என்று குறிப்பிடப்பட்டுள்ளதை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்த நபருக்காக onlineல் ஆவணங்கள் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு தாக்கல் செய்த போது எதிர்மனுதாரர் அதை ஏற்று கொள்ளவில்லை என்பதால் தான் விவரங்கள் பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. விபத்து 12.04.2017ல் ஏற்ப்பட்டது. மனுதாரர் நிறுவனம் 22.06.2017 மற்றும் 24.06.2017 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பதிவு செய்தோம். 70 நாட்கள் காலதாமதம் ஆனதற்கு என்ன காரணம் என்பதற்கு விளக்கம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இது மனுதாரர் நிறுவனத்தின் ஆஜாகிரதை தனம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 01.12.2016 தேதியில் J.M. Traders உடன் போடப்பட்ட ஒப்பந்தம் என்றால் சரிதான். அந்த ஆவணம் Ex R1. J.M. Traders நிறுவனம் அளித்த ஒப்பந்த

தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உடைகள் போடப்பட்டிருந்ததா என்று மனுதாரர் நிறுவனத்தின் maintenance Supervisior பார்வையிட்டுள்ளார். ஒப்பந்த தொழிலாளர்கள் என்ன வேலை பார்த்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் roofல் ஆஸ்பெஸ்டாஸ் seat fitting பணிக்காக வந்திருந்தனர். roofல் ஆஸ்பெஸ்டாஸ் seat fittingக்கு என்ன safety measures எடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் safty belt அணிந்திருக்க வேண்டும். தரையில் objects எதுவும் இருக்கக் கூடாது. என்னிடம் காட்டப்படுவது 14.05.1997 தேதியிட்ட C-11 கடிதம் என்றால் சரிதான். அது Ex R2. 12.04.2017 தேதியிட்ட FIR Copy தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த FIR copy நகல் Ex R3. FIR copy ல் safety belt ம் helmet ம் அளிக்காமல் இருந்ததால் தான் விபத்து ஏற்ப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. safety beltம், helmetம் அணிந்திருந்தால் மேல் இருந்து விழுந்த சமயத்தில் இறந்து போவதற்கு சாத்தியம் இல்லை என்றால் சரிதான். எந்த பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் தான் இறந்த பிரதீஸ் வேலை செய்தார் என்றால் நான் அந்த இடத்தில் இல்லாததால் எனக்கு அதை பற்றி தெரியாது. மனுதாரர்

நிறுவனத்தில் 150 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் safety beltம், helmetம் அணிந்திருந்தார்கள் என்பதை குறித்து நான் விசாரித்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படுவது 12.04.2017 தேதியிட்ட Report of accident என்றால் சரிதான். அந்த Report of accidentன் நகல் Ex R4. Roofன் மேல் பணியாற்றும் சமயத்தில structure இடப்பட்டு அதற்கு மேல் அமர்ந்து தான் roofing sheet போடுவார்கள் என்றால் சரிதான். Contractor வேலைக்கு ஆட்கள் மட்டும் தான் தருவார். பாதுகாப்பு உபகரணங்கள் மனுதாரர் நிறுவனம் தான் அளிக்க வேண்டும் என்றால் சரியல்ல. ஆனால் பாதுகாப்பு உபகரணங்களை contractor தான் தர வேண்டும். பாதுகாப்பு உபகரணங்களான beltம், helmetம் அணிந்திருந்தால் தவறி விழுந்திருந்தாலும் அடிப்படவோ, இறக்கவோ வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். 13.04.2017 தேதியிட்ட பிரதீஸ்ன் post-mortem certificate தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த Certificate Ex R5. இந்த விபத்துக்காக CC 32/2018 வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜரானேன் என்றால் சரிதான். அந்த 09.02.2018 தேதியிட்ட CC 32/2018 வழக்கின் மனு நகல், fine receipt மற்றும் summon copy

தான் Ex R6. 21.05.2018 தேதியில் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் இருந்து அதிகாரி எழுதி கொடுத்த கடிதம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த கடிதம் Ex R7. எங்கள் நிறுவனம் 5 நபர்களுக்கு சந்தா ரசீது கட்டிய ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த ரசீது Ex R8 வரிசை. என்னிடம் காட்டப்படுவது தான் எங்கள் நிறுவனம் பதிவு செய்த C6 registerன் நகல் என்றால் சரிதான். அந்த C-6 registerன் நகல் Ex R9. C6 registerயை மனுதாரர் தான் generate செய்ய முடியும் என்றால் சரிதான். 11.04.2017, 11.05.2017, 06.06.2017 மற்றும் 09.06.2017 ஆகிய தேதிகளில் challan ஏற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் கணினி வேலை செய்ய வில்லை என்று நாங்கள் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 22.06.2017 தேதியில் விபத்தில் இருந்த நபருக்கும் சேர்த்து சந்தா தொகை செலுத்தியுள்ளோம். ஆனால் C-6 registerன் படி ஏப்ரல், மே மற்றும் ஜீன் ஆகிய மாதங்களில் மனுதாரர் நிறுவனம் சந்தா செலுத்தியுள்ளது என்றால் சரிதான். 30.01.2018 தேதியில் இறந்த பிரதீஸ்ன் விண்ணப்பம் எதிர்மனுதாரர் நிறுவனத்தால் நிராகரிக்கப்பட்டது என்று கொடுத்த கடிதம் என்றால் சரிதான். அந்த கடிதம் Ex R10. ESIOP

106/2019ல் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த எதிருரை Ex R11. இறந்த பிரதீஸ்ன் குடும்பத்தாருக்கு ESI நிறுவனம் காப்பீடு தொகை வழங்கிய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனுதாரர் நிறுவனத்தின் ஆஜாகிரையாதால் தான் விபத்து ஏற்பட்டு அவர் இறந்த பின்பு பிரதீஸ்க்காக சரியான நேரத்தில் காப்பீட்டு தொகை செலுத்தாததும் எங்கள் நிறுவனத்தின் ஆஜாகிரதை என்றால் சரியல்ல. காப்பீடு தொகை 70 நாட்களுக்கு மேல் தாமதமானத்திற்கு சரியான காரணங்கள் ESI நிறுவனத்திலோ, நீதிமன்றத்திலோ தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், எங்களுடைய back wages தொகையை நாங்கள் செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.